RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

www.malaithanthi.in

DAILY EVENING | மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 268 | அக்டோபர் 2, 2026 வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# “கதர் ஆடைகளையும், உள்ளூர் உற்பத்திப் பொருட்களையும் வாங்குவோம்” - முதல்வர் விஜய் வேண்டுகோள்

சென்னை: அக்.2-

‘தமிழக மக்கள் அனைவரும் கதர் ஆடைகளையும், கிராமப் பொருட்களையும் வாங்கி நூற்பாளர், நெசவாளர் மற்றும் கைவினைஞர் வாழ்வில் புத்தொளி பாய்ச்ச வேண்டும்’ என முதல்வர் விஜய் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் விஜய் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘அண்ணல் மகாத்மா காந்தியடிகளின் பிறந்த நாளான அக்டோபர் 2-ஆம் நாள், நம் நாட்டின் விடுதலைப் போராட்ட வரலாற்றையும், எளிமை, சுயநம்பிக்கை, உழைப்புக்கு மதிப்பு, அனைவரையும் அரவணைக்கும் மனிதநேயத்தையும் நினைவுகூரும் நாளாகத் திகழ்கிறது. அகிம்சை என்னும் ஆயுதத்தை ஏந்திய அண்ணல் காந்தியடிகள், இராட்டை என்னும் நூற்புச் சக்கரத்தின் மூலம் ஒவ்வொரு இந்தியனுக்கும் பொருளாதார சுதந்திரத்தையும், சுயசார்பையும் போதித்தார்.

ஒரு கதராடையை நாம் வாங்குவது, ஒரு நெசவாளரின் கைத்திறனுக்கு அளிக்கும் அங்கீகாரம். ஒரு கிராமப் பொருளை நாம் வாங்குவது, ஒரு கைவினைஞரின் உழைப்புக்கு அளிக்கும் மரியாதை. உள்ளூரில் தயாரிக்கப்படும் பொருளை நாம் பயன்படுத்தும்போது, அது நமது




மண்ணின் உற்பத்தித் திறனுக்கு அளிக்கும் ஊக்கம்.

இன்றைய காலகட்டத்தில், சுற்றுச்சூழல் நேயமிக்க, இயற்கை இழையால் ஆன ஆடைகளுக்கான தேவை உலகளவில் அதிகரித்து வருகிறது. இதற்கேற்ப, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், பாரம்பரியத்தையும் நவீனத்துவத்தையும் இணைத்து, புதிய வடிவமைப்புகளிலும், மின்னணு வணிகத் தளங்கள் வாயிலாகவும் கதர் கிராமத் தொழில் பொருட்களை எளிதில் அனைவரும் அணுகும் வகையில் மேம்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு முழுவதும் உள்ள கதரங்காடிகள் வழியாக, ஆண்டு முழுவதும் 30% தள்ளுபடியில் கதர் பருத்தி, பாலியஸ்டர் மற்றும் பட்டு இரகங்களைப் பொதுமக்களுக்கு வழங்கி வருகிறது.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர், அரசு ஊழியர்கள், தனியார் நிறுவன ஊழியர்கள், இளைஞர்கள் மற்றும் தமிழக மக்கள் அனைவரும் கதர் ஆடைகளையும், கிராமப் பொருட்களையும் வாங்கி, நம் நூற்பாளர், நெசவாளர் மற்றும் கைவினைஞர் வாழ்வில் புத்தொளி பாய்ச்ச வேண்டுமென அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். கதரைத் தேர்ந்தெடுப்போம், கைத்திறனைப் போற்றுவோம், உள்ளூர் உற்பத்திக்கு உயிரூட்டுவோம்” எனத் தெரிவித்துள்ளார்.

# “தமிழர்களின் மரபணுவில் மதுப் பழக்கம் பதிவாகிவிடும் அபாயம்” - அன்புமணி எச்சரிக்கை

சென்னை: அக்.2-

“மது ஒழிப்பு இயக்கம் நாளை தொடங்கவிருக்கிறது. எனவே மதுவை ஒழிக்க சவுமியா அன்புமணியின் முயற்சிக்கு தமிழகம் துணை நிற்க வேண்டும்,” என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “நாட்டுக்கு மிகவும் முக்கியமான செல்வம் கல்வி தான். ஆனால், மது வணிகத்தின் மூலம் கிடைக்கும் வருமானத்தில் தான் குழந்தைகளுக்கு கல்வி வழங்கப்பட வேண்டும் என்றால், அந்த கல்வியே கூட தேவையில்லை; நாடு மது இல்லாமல் இருந்தால் போதுமானது என்பதே எனது நிலைப்பாடு என்று முழங்கியவர் தேசத்தந்தை மகாத்மா காந்தியடிகள்.

மது இல்லாத இந்தியா என்ற கொள்கையில் அந்த அளவுக்கு உறுதியாக இருந்த காந்தியடிகளின் பிறந்த நாளான (அக்டோபர் 2) நாளை, மது இல்லாத் தமிழகம் (’Alcohol Free Tamilnadu’) என்ற புதிய இயக்கத்தை பசுமைத் தாயகம் அமைப்பின் தலைவர் சவுமியா அன்புமணி தொடங்கவுள்ளார். மதுவை ஒழிக்கும் நோக்குடன் அவர் முன்னெடுக்கும் இந்த முயற்சிக்கு எனது வாழ்த்துகளையும், ஆதரவையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஒட்டுமொத்த தமிழக மக்களும் இந்த உன்னத முயற்சியை ஆதரிக்க வேண்டுகிறேன்.

தமிழகம் இன்று எதிர்நோக்கியுள்ள ஆபத்துகளில் முதன்மையானது என்னவென்றால், மதுவால் ஏற்படும் கேடுகள் என்று ஐயத்திற்கு இடமின்றி கூறி விடலாம். அந்த அளவுக்கு மதுவால் சமூக,



சுகாதார, பொருளாதார பாதிப்புகள் ஏற்படுகின்றன. இந்திய அளவில் இளம் விதவைகள் நிறைந்த மாநிலம் தமிழ்நாடு தான். நாட்டில் மிக அதிக எண்ணிக்கையில் சாலை விபத்துகளும், தற்கொலைகளும் நிகழும் மாநிலம் தமிழ்நாடு தான்.

இவை அனைத்துக்கும் முதன்மைக் காரணம் மது தான் என்பதை மறுக்க முடியாது. பெண்களுக்கு எதிராக கணவர்களால் இழைக்கப்படும் கொடுமைகளுக்கு முதன்மைக் காரணம் மது தான் என்பது ஆய்வுகளில் தெரிய வந்துள்ளது.

மதுவால் ஏற்படும் சுகாதார பாதிப்புகள் இன்னும் கொடுமையானவை. 7 வகையான புற்றுநோய்கள், இதய நோய், கல்லீரல் அழற்சி உள்ளிட்ட 200 வகையான நோய்கள் மது குடிப்பதால் ஏற்படுகின்றன. மது குடிப்பதால் மட்டும் தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் 2 லட்சத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழக்கின்றனர்.

அவர்களில் கிட்டத்தட்ட 70 விழுக்காட்டினர், அவர்களின் குடும்பத்திற்கு வாழ்வாதாரம் தேடித் தருபவர்களாக இருப்பதால், அவர்களின் மரணத்தைத் தொடர்ந்து அந்தக் குடும்பங்கள் நடுத்தெருவுக்கு வருகின்றனர். தமிழகத்தில் இன்றைய நிலையில் மதுப்பழக்கத்திற்கு அடிமையான 54 லட்சம் பேருக்கு மருத்துவம் தேவைப்படுகிறது.

மது வணிகத்தின் மூலம் தமிழக அரசுக்கு ஆண்டுக்கு ரூ.60,000 கோடி வரை வருமானம் கிடைப்பதால், அதை தவிர்க்க முடியாது என்றொரு அபத்தமான வாதம் முன்வைக்கப்படுகிறது. இதை ஏற்கவே முடியாது. மது மூலம் அரசுக்கு ஆண்டுக்கு ரூ.60,000 கோடி வருமானம் கிடைப்பதாக வைத்துக் கொண்டால், அதனால் மது குடிப்பவர்களுக்கு ஏற்படும் சுகாதார பாதிப்புகளை சரி செய்வதற்காக மட்டும் ரூ.1.08 லட்சம் அரசுக்கு செலவாகிறது என்றும், மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளின் அளவு ரூ.72,000 கோடி என்றும் ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது.

அதாவது, மது வணிகத்தின் மூலம் கிடைக்கும் வருவாயை விட 3 மடங்கு இழப்பு அரசுக்கும், பொதுமக்களுக்கும் ஏற்படுகிறது. அதுமட்டுமின்றி, மதுப்பழக்கம் உள்ளவர்களின் குடும்பங்களில் 85%-க்கும் கூடுதலானவை தாங்க முடியாத கடன்சுமையில் தவிக்கின்றன. அக்குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு உடல்நல பாதிப்பு ஏற்பட்டால் கூட அதற்கு மருத்துவம் செய்வதற்கு தேவையான அவர்களிடம் பணம் இல்லை.

தமிழகத்தின் இன்றைய பொருளாதார மதிப்பு சுமார் ரூ.41 லட்சம் கோடி என கணக்கிடப்பட்டுள்ளது. தமிழகத்தின் இளைஞர்கள் மதுவுக்கு அடிமையாகாமல் இருந்து, இயல்பான அளவில் பணி செய்தால், தமிழக பொருளாதாரம் ரூ.53.30 லட்சம் கோடி என்ற அளவுக்கு உயர்ந்திருக்கும். அதாவது, மதுப்பழக்கம் மட்டுமே தமிழகத்தின் பொருளாதாரத்தை 30%, அதாவது ரூ.12.30 லட்சம் கோடி அளவுக்கு வீழ்ச்சியடையச் செய்திருக்கிறது என்பதில் இருந்தே நாடும், வீடும் வாழ்வதற்காக மது ஒழிக்கப்பட வேண்டும் என்பதை நாம் அனைவரும் உணரலாம்.

இவை அனைத்தையும் விட இன்னொரு பெரும் அச்சுறுத்தலை மதுவால் தமிழகம் எதிர்கொண்டு வருகிறது. தமிழகத்தில் இரு தலைமுறையினர் மதுவுக்கு அடிமையாகி விட்ட நிலையில், இப்போதுள்ள மூன்றாம் தலைமுறையும் மதுவுக்கு அடிமையானால், தமிழர்களின் மரபணுவில் மதுப் பழக்கம் பதிவாகிவிடும் என்றும், அதன்பின் தமிழர்களை மதுப்பழக்கத்திலிருந்து மீட்க முடியாது என்றும் பொது சுகாதாரத்துறை வல்லுநர்கள் எச்சரித்திருக்கின்றனர்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# தேர்தல் வழக்கை நிராகரிக்கக் கோரி முன்னாள் எம்எல்ஏ இசக்கி சுப்பையா தாக்கல் செய்த மனு தள்ளுபடி: ஐகோர்ட்

சென்னை: அக்.2-

தனக்கு எதிரான தேர்தல் வழக்கை நிராகரிக்கக் கோரி அம்பாசமுத்திரம் தொகுதி முன்னாள் எம்எல்ஏ இசக்கி சுப்பையா தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் அம்பாசமுத்திரம் தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிட்ட இசக்கி சுப்பையா தன்னை எதிர்த்து போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் வி.பி.துரையை விட 10,245 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று பின்னர், பதவியை ராஜினாமா செய்து, தவெகவில் இணைந்தார்.

இதனிடையே, இசக்கி சுப்பையாவின் வெற்றியை செல்லாது என அறிவிக்கக் கோரி வாக்காளர் காந்திமதிநாதன் சென்னை உயர் நீதிமன்றத்தில் தேர்தல் வழக்கு தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கில் பதிலளிக்கும்படி இசக்கி சுப்பையாவுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில், தனக்கு எதிரான இந்த தேர்தல் வழக்கை நிராகரிக்கக் கோரி இசக்கி சுப்பையா தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி பி.பி. பாலாஜி, வாக்காளர் காந்திமதிநாதனின் மனுவை நிராகரிக்க மறுத்து, இசக்கி சுப்பையாவின் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

இதேபோல, தேர்தல் வழக்கு தொடர்பான மனுவில், குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ள சில பத்திகளை நீக்க வேண்டும் என்ற இசக்கி சுப்பையாவின் கோரிக்கையை ஏற்று, அந்த பத்திகளை நீக்கி நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

அம்பாசமுத்திரம் தொகுதிக்கு இடைத்தேர்தல் நடத்தக்கூடாது என்ற பொதுநல வழக்கு விசாரணையில் இருந்துவரும் சூழலில், தேர்தல் வழக்கை நிராகரிக்க வேண்டும் என்று இசக்கி சுப்பையா தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது முக்கியத்துவம் பெறுகிறது.

# வணிக பயன்பாட்டுக்கான எல்பிஜி சிலிண்டர் விலை உயர்வு: சென்னையில் ரூ.2,983-க்கு விற்பனை

சென்னை: அக்.2-

வணிக பயன்பாட்டுக்கான எல்பிஜி சிலிண்டர் விலை சென்னையில் ரூ.66.50 என உயர்ந்துள்ளது. இதனால் சென்னையில் வணிக பயன்பாட்டுக்கான எல்பிஜி சிலிண்டர் ஒன்று ரூ.2,983-க்கு விற்பனை ஆகிறது.

சர்வதேச சந்தை விலை நிலவரத்துக்கு ஏற்ப சமையல் எரிவாயு (எல்பிஜி) சிலிண்டர் விலை மாதந்தோறும் 1-ம் தேதி மாற்றி அமைக்கப்படுகிறது. எனினும், மதிப்புக் கூட்டு வரி போன்ற உள்ளூர் வரிகளைப் பொறுத்து மாநிலத்துக்குக் மாநிலம் அதன் விலை சற்று மாறுபடும்.

இந்நிலையில், வணிகப் பயன்பாட்டுக்கான எல்பிஜி சிலிண்டர் விலையை பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் இன்று (அக்.1) உயர்த்தி உள்ளன. இருப்பினும் 14.2 கிலோ



எடை கொண்ட வீட்டுப் பயன்பாட்டுக்கான எல்பிஜி சிலிண்டர் விலை மாற்றப்படவில்லை. சென்னையில் வீட்டு பயன்பாட்டுக்கான எல்பிஜி சிலிண்டர் ரூ.957.50-க்கு விற்பனை ஆகிறது.

இன்று வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பின்படி, சென்னையில் வணிக சிலிண்டரின் விலை ரூ.66.50 என்று உயர்ந்துள்ளது. இந்த விலை மாற்றம் இன்று முதல் நாடு முழுவதும் அமலுக்கு வந்துள்ளது.

இதனால் சென்னையில் 19 கிலோ எடை கொண்ட வணிகப் பயன்பாட்டுக்கான எல்பிஜி சிலிண்டர் விலை ரூ.2,983 என தற்போது விற்பனை ஆகிறது. கடந்த ஜூலை மாதம் வணிக சிலிண்டர் விலை ரூ.177, ஆகஸ்ட் மாதம் ரூ.200 என்று குறைந்தது. கடந்த செப்டம்பர் மாதம் ரூ.10.50 என வணிகப் பயன்பாட்டுக்கான எல்பிஜி சிலிண்டர் விலை உயர்ந்தது குறிப்பிடத்தக்கது.

# “விஜயகாந்த் பற்றி பேசுவதை ஆதவ் அர்ஜுனா நிறுத்திக்கொள்ள வேண்டும்” - பிரேமலதா காட்டம்

கோவை: அக்.2-

“எங்கள் கட்சிக்கு சம்பந்தம் இல்லாதவர்கள் விஜயகாந்த் ஆன்மா குறித்து பேசுவதற்கு அருகதையே கிடையாது” என தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்தார்.

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தல் பிரச்சாரத்தில் திமுக வேட்பாளருக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்வதற்காக, தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் சென்னையில் இருந்து விமானம் மூலம் கோவை வந்தார்.

கோவை விமான நிலையத்தில் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தாராபுரத்தில் திமுக நிச்சயம் வெற்றி பெறும். யாராக இருந்தாலும் பெண்களைப் பற்றி தவறாகப் பேசுவதை எந்தக் காலத்திலும் அனுமதிக்க முடியாது. பெண்கள் குறித்து தரக்குறைவாக பேசுபவர்களுக்கு என் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

விஜயகாந்தின் ஆன்மா குறித்து அமைச்சர் ஆதவ் அர்ஜுனா பேசியுள்ளார். முதலில் ஆதவ் அர்ஜுனா எப்போதாவது விஜயகாந்தை நேரில் பார்த்திருக்கிறாரா?. விஜயகாந்தின் ஆன்மா என்றும் என்னைச் சுற்றி இருக்கும்.

அப்படியிருக்க, விஜயகாந்த் உடைய குடும்பத்துக்கும், கட்சிக்கும் சம்பந்தமே இல்லாதவர்கள் அவரது ஆன்மா குறித்து பேசுவதற்கு அருகதையே கிடையாது. தம்பி ஆதவ் அர்ஜுனா இத்தோடு விஜயகாந்த் பற்றி பேசுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

வாக்குப்பதிவு இயந்திரத்தில் பல குளறுபடிகள் நடப்பதாக நிரூபிக்கப்பட்டு வருகிறது. எஸ்.ஐ.ஆர் மூலம் ஆட்சி மாறி இருக்கிறது. பழைய முறைப்படி தேர்தல் வேண்டும் என்பதுதான் எங்கள் நிலைப்பாடு. வாக்குப்பதிவு இயந்திரத்தில் நிறைய தவறுகள் நடைபெறுகின்றன. நாளை நடைபெறும் கிராமசபைகூட்டங்களில், எங்கள் கட்சி நிர்வாகிகள் கலந்துகொண்டு வாக்குப்பதிவு இயந்திரங்கள் தடை செய்ய வேண்டும் என தீர்மானம் கொண்டு வர இருக்கிறார்கள்.

பேருந்து கட்டணம் பல மடங்கு உயர்ந்திருக்கிறது. நான்கு முதல் ஐந்து மடங்கு உயர்ந்து இருப்பதால் மக்கள் பாதிக்கின்றனர். விலைவாசி உயர்வு, பேருந்துக் கட்டண உயர்வு போன்றவற்றை திரும்பப் பெற வேண்டும். மின்கட்டண பிரச்சினை, டாஸ்மாக் பிரச்சினை, பாலியல் வன்கொடுமை பிரச்சினை என ஏராளமான பிரச்சினைகள் இருக்கின்றன.

கொடுத்த வாக்குறுதிகளை முதல்வர் விஜய் இன்னும் நிறைவேற்றவில்லை. ரூ.2,500 பெண்களுக்கு கொடுக்க வேண்டும். பாமக இந்த தேர்தலில் யாருக்கும் ஆதரவு இல்லை என்ற நிலைப்பாடு எடுத்திருப்பது மதுராந்தகத்தில் தவெகவுக்கு சாதகமாக இருக்குமா என்பதை அவர்களிடம் தான் கேட்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

present sale for all over Tamil Nadu

தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது




# சமூக நீதி மாணவர் விடுதிகளில் மாட்டிறைச்சி உணவு வழங்க வலியுறுத்தி விசிக ஆர்ப்பாட்டம்

சிவகங்கை, அக். 02-

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நேற்று சமூக நீதி மாணவர் விடுதிகளில் மாட்டிறைச்சி உணவு வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மற்றும் சமூக நீதித்துறை அமைச்சர் வன்னியரசு குறித்து புதிய தமிழகம் கட்சித் தலைவர் கிருஷ்ணசாமி அவதூறாகப் பேசியதாக குற்றம்சாட்டிய ஆர்ப்பாட்டக்காரர்கள், அதற்கு கண்டனம் தெரிவித்தும் முழக்கங்களை எழுப்பினர்.

மேலும், சமூக நீதி மாணவர் விடுதிகளில் மாட்டிறைச்சி உணவை வழங்க வேண்டும் என வலியுறுத்தி, "மாட்டுக்கறி உணவு வழங்கும்" போராட்டமும் நடைபெற்றதாக கட்சி நிர்வாகிகள் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்திற்கு மானாமதுரை தொகுதி மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் வே. பாலையா, சிவகங்கை தொகுதி மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் வெற்றி விஜயன், காரைக்குடி தொகுதி மாவட்டச் செயலாளர் உஞ்சனை சரவணன் ஆகியோர் தலைமை வகித்தனர்.

மாவட்டப் பொருளாளர் ஆதிவளவன், மாவட்ட துணைச் செயலாளர்கள் திருமா ஆனந்த், சேதுராமன், கண்ணன் உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய மற்றும் நகர நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்



# பரமக்குடியில் அருள்மிகு ஸ்ரீ உச்சமாகாளி அம்மன் கோவில் முளைப்பாரி திருவிழா சிறப்பாக நடைபெற்றது

பரமக்குடி அக்-02

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி மாதவன் நகரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ உச்சமாகாளி அம்மன் கோவிலின் மூன்றாம் ஆண்டு முளைப்பாரி திருவிழா, பால்குடம் மற்றும் அக்னிச்சட்டி பெருவிழா வெகுவிமரிசையாக நடைபெற்றது.

இத்திருவிழா செவ்வாய் (29.09.2026) மற்றும் புதன் (30.09.2026) ஆகிய இரண்டு நாட்கள் விமரிசையாக நடைபெற்றன. விழாவின்



முக்கிய நிகழ்வுகளாக பால்குடம் எடுத்தல், அக்னிச்சட்டி ஏந்துதல் மற்றும் நேர்த்திக்கடனாக முளைப்பாரி சுமந்து ஊர்வலமாகச் செல்லுதல் ஆகியவை பக்திப் பரவசத்துடன் நடைபெற்றன. இதில் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு அம்மனைத் தரிசித்து வழிபட்டனர்.

விழாவிற்கான ஏற்பாடுகளை மாதவன் நகர் மக்கள் நலச்சங்கம், நேதாஜி இளைஞர் நற்பணி மன்றம், மாதவன் நகர் பொதுமக்கள், இரயில்வே பீடர் ரோடு பொதுமக்கள் மற்றும் 32-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் M. வடமலையான் ஆகியோர் முன்னின்று ஒருங்கிணைத்தனர்.




# கிருஷ்ணகிரியில் உலக வெப்பமயமாதலில் தொண்டு நிறுவனங்களின் பங்கு குறித்து கருத்தரங்கு

கிருஷ்ணகிரி, அக். 02-

தமிழ்நாடு தன்னார்வ நல குழுமம் சார்பில், உலக வெப்பமயமாதலில், தொண்டு நிறுவனங்களின் பங்கு என்கிற தலைப்பில், மாநில அளவிலான கருத்தரங்கம் நேற்று கிருஷ்ணகிரியில் நடந்தது. இதில் தமிழ்நாடு முழுவதும் இருந்து 180 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். சுவார்டு நிறுவனம் ஜலாலுதின் வரவேற்றார். அமைப்பின் தலைவர் ஷியாமலா சத்தியசீலன், செயலாளர் கேஷவ்ராஜ், பொருளாளர் முகமது உசேன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கிருஷ்ணகிரி தவெக எம்எல்ஏ முகுந்தன் வாழ்த்துரை வழங்கினார். மூத்த தலைமைத்துவ குழு இயக்குனர் பிரதாபன் கருத்துரை வழங்கினார்.

கூட்டத்தில், துருவப் பகுதிகளில் பனி அதிகம் உருகுதல், கடல் மட்டம் உயர்வு, கடலோரப் பகுதிகளில் வெள்ளப் பெருக்கு மற்றும் மழைக் காலத்தில் விவசாயம் சேதம் போன்ற கா ரணங்களால் உணவுப் பொருட்களின் விலை உயர்ந்து வருகிறது. ஆனால் கார்பனை குறைக்க, தொழிற்சாலைகளை கட்டுப்படுத்த வேண்டும். பெட்ரோல் பயன்பாட்டை முழுமையாக நிறுத்த வேண்டும். ஏ.சி, ஃபிரிட்ஜ் போன்றவற்றின் பயன்பாட்டை தவிர்க்க வேண்டும். ஆனால் இவற்றை தவிர்க்க முடியாது. அதனால், மரங்கள் நடுவது மட்டுமே இதற்கு தீர்வாகும். தற்போதுள்ள எல் நினோ, மனித செயல்களுடன் தொடர்பில்லாத இயற்கை நிகழ்வு. இது பூகம்பம், சுனாமி, எரிமலை வெடிப்பு போன்ற இயற்கை நிகழ்வு. 4,000 ஆண்டுகளுக்கு முன்பு சிந்து நாகரிகத்தின் காலநிலை மாற்றத்தைப் போல், தற்போதும் நடந்து வருகிறது. இவற்றை தவிர்க்க பேரணிகள், மாரத்தான் பிரச்சாரம் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். உலக வெப்பமயமாதல், எல் நினோ ஆகியவை மனித செயல்பாடுகளுக்கு அப்பாற்பட்ட இயற்கை காரணங்கள். இதற்கு, உயிரியல் அறிவியல் சார்ந்த ஆராய்ச்சிக்கு அழுத்தம் கொடுத்து பல்துறை அறிவியல் ஆய்வை முன்னெடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. மாவட்ட அமைப்பாளர் முருகன் நன்றி கூறினார்.

# குரோம்பேட்டை ஸ்ரீமதி தேவ்குன்வர் நானாலால் பட் மகளிர் வைணவக் கல்லூரியில் 'ஸ்மிருதி '26 ஆனந்த உத்சவ்' கலைவிழா கோலாகல நிறைவு! MCC கல்லூரி ஒட்டுமொத்த சாம்பியன்ஷிப் கோப்பையை வென்றது!

சென்னை, அக்.02-

செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டையில் அமைந்துள்ள ஸ்ரீமதி தேவ்குன்வர் நானாலால் பட் வைணவக் கல்லூரியில், பெண்களுக்காக மட்டும் நடத்தப்பட்ட 'ஸ்மிருதி '26 ஆனந்த உத்சவ்' (Smriti '26 Ananda Utsav) மாபெரும் கலைவிழா மிகச் சிறப்பாக நிறைவுபெற்றது.

'Celebration of Joy' என்ற கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு செப்டம்பர் 25 மற்றும் 26 ஆகிய இரு நாட்கள் நடைபெற்ற இவ்விழாவில், பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவியர் மிகுந்த உற்சாகத்துடன் கலந்துகொண்டு தங்களது கலைத்திறமைகளை வெளிப்படுத்தினர்.

சிறப்பு விருந்தினர்கள் மற்றும் பிரபலங்கள் பங்கேற்பு தொடக்க விழா செப்டம்பர் 25 அன்று நடைபெற்ற தொடக்க விழாவில் நடிகை சுமித்ரா, இசையமைப்பாளர் விஜய் வீரபாண்டியன், நிதியாளர் மற்றும் இணைத் தயாரிப்பாளர் கௌஷிகா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு மாணவியரை ஊக்கப்படுத்தினர். மேலும், 'சிறகு' படக்கு முவினரும் அருண் & அரவிந் குடும்பத்தினரும் நிகழ்வைச் சிறப்பித்தனர்.

நிறைவு விழா இரண்டாம் நாளான செப்டம்பர் 26 அன்று நடைபெற்ற நிறைவு விழாவில், கல்லூரியின் முதன்மை வியூக வகுப்பாளர் (Chief Strategy Officer) கரன் பட் அவர்கள் சிறப்புடன் கலந்துகொண்டு நிகழ்வைச் சிறப்பித்தார். மேலும், நடிகர் ஆகாஷ், ஆதித்யா டிவி VJ விஜய், நடிகர் கௌதம் ராஜ், நடிகர் ரமேஷ் சக்கரவர்த்தி, நடிகை ஷெரின் மற்றும் 'யாத்திசை' திரைப்படக் குழுவினர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்று விழாவை மெருகூட்டினர்.




பல்வேறு போட்டிகளில் சிறப்பாகப் பங்கேற்ற கல்லூரிகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்ட இத்திருவிழாவில், மெட்ராஸ் கிறித்துவக் கல்லூரி (MCC-Madras Christian College) ஒட்டுமொத்தப் பரிசு கோப்பையைத் தட்டிச் சென்று சாதனை படைத்தது.

கல்லூரி முதல்வர் லெப்டினெண்ட் முனைவர் கே.காந்திமதி முன்னிலை வகித்தனர், கல்லூரிச் சுயநிப்பிரிவின் இயக்குநர் முனைவர் எம். எஸ். விஜயா வழிகாட்டுதலுடன் நடைபெற்ற இவ்விழாவின் வெற்றிக்குத் துணை முதல்வர்கள், பேராசிரியர்கள், ஃபைன் ஆர்ட்ஸ் மற்றும் ஸ்மிருதி அமைப்பின் பேராசிரியர் மற்றும் மாணவ உறுப்பினர்கள் ஆகியோர் ஒருங்கிணைந்து அயராது உழைத்தனர்.

மாணவியரிடையே கலை, பண்பாடு மற்றும் படைப்பாற்றலை ஊக்குவிக்கும் வகை யில் அமைந்துள்ள இந்த மெகா கலாச்சாரத் திருவிழா, பங்குபெற்ற அனைவருக்கும் மறக்க முடியாத ஒரு இனிய அனுபவமாக அமைந்தது



# SGFI Under-14 தமிழ்நாடு கால்பந்து அணிக்கு தேர்வான மாணவர் முன்னாள் எம்.எல்.ஏ. எஸ்.ஆர். ராஜாவை சந்தித்து வாழ்த்துக்கள் பெற்றனர்

தாம்பரம், அக். 02-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மேற்கு பகுதி மாநகர பிரதிநிதி அ.லோகேஸ் குமார் அவர்களின் மகன் A.L.ரிஷிநிதி, கால்பந்து விளையாட்டில் சிறப்பாக விளையாடி, SGFI Under-14 தமிழ்நாடு கால்பந்து அணியில் இடம்பெற தேர்வாகியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து, SGFI Under-14 தமிழ்நாடு கால்பந்து அணியில் இடம்பிடித்ததற்கான சான்றிதழை, முன்னாள் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்களை நேரி ல் சந்தித்து காண்பித்து மகிழ்ந்தார்.

மாணவர் ரிஷிநிதியின் இந்த சாதனைக்கு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்கள் பாராட்டு மற்றும் வாழ்த்துகளை தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கழக நிர்வாகிகள் கே.ஞானவேல் ராஜா, E.குபேந்திரன், S.சாய் உள்ளிட்டோர் உடனிருந்தனர்




# பத்திரிகையாளரை மிரட்டும் போலி சமூக ஆர்வலரை கைது செய்யக்கோரி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

திருப்பத்தூர், அக்.02-

பத்திரிகையாளரை மிரட்டும் போலி சமூக ஆர்வலரை கண்டித்து திருப்பத்தூர் பிரஸ் கிளப் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் நடைபெற்ற இந்த ஆர்ப்பா ட்டத்திற்கு பிரஸ் கிளப் தலைவர் வெங்கடேசன் தலைமை தாங்கினார். செயலாளர் சரவணன் வரவேற்புரை ஆற்றினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில், பத்திரிகையாளர்களை சமூக வலைதளங்களில் அவதூறாகவும், இழிவாகவும் பதிவு செய்து மிரட்டி வரும் போலி சமூக ஆர்வலர் சுரேஷ்குமார் என்பவரை கைது செய்ய வேண்டும், பத்திரிகையாளர்களை பாதுகாக்கும் வகையில் பத்திரிகையாளர்கள் பாதுகாப்பு சட்டத்தை உடனடியாக இயற்ற வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு உழைக்கும் பத்திரிகையாளர்கள் சங்க மாவட்ட தலைவர் வினாயக மூர்த்தி, செயலாளர் ஆனந்தகுமார்,

தமிழ்நாடு ரிப்போர்ட்டர் சங்க தலைவர் ராஜீவ் காந்தி, சிஐடியூ ஒருங்கிணைப்பாளர் கேசவன், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் தாலுகா செயலாளர்கள் முல்லை, ஆனந்தன், நிர்வாகிகள் அருண்குமார், ஜெயகாந்தன் உட்பட பலர் கலந்து கொண்டனர்



# தேவகோட்டையில் வாளுடன் பொதுமக்களை அச்சுறுத்திய இளைஞர் கைது

தேவகோட்டை, அக்-02-

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை நகர் காவல் நிலைய காவல்துறையினர் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது, தேவகோட்டை அருகே சிலம்பணி ஊரணி பகுதியில் ஒருவர் வாளுடன் நின்று பொதுமக்களை அச்சுறுத்துவதாக தகவல் கிடைத்தது. இதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற காவல்துறையினர், வாளுடன் நின்று பொதுமக்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்திய நபரை பிடித்து விசாரணை மேற்கொண்டனர். விசாரணையில் அவர், தேவகோட்டை வள்ளியப்ப செட்டியார் ஊரணி பகுதியைச் சேர்ந்த சூர்யா (19) என்பது தெரியவந்தது. அவரிடமிருந்த வாளை பறிமுதல் செய்த காவல்துறையினர், உரிய சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து அவரை கைது செய்தனர். பின்னர் சூர்யா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். நீதிமன்ற உத்தரவின்படி அவர் சிறையில் அடைக்கப்பட்டார். இதுகுறித்து சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா, இ.கா.ப., பொதுமக்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் ஆயுதங்களுடன் சுற்றித்திரிவது, பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் செயல்களில் ஈடுபடுவது போன்ற குற்றங்களில் ஈடுபடுவோர் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எச்சரிக்கை விடுத்துள்ளார். மேலும், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் மாவட்டம் முழுவதும் காவல்துறையினரின் ரோந்து மற்றும் கண்காணிப்பு பணிகள் தொடர்ந்து தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.




# முன்னாள் படைவீரர்கள் / சார்ந்தோர்கள் மற்றும் படைப்பணியில் பணிபுரிவோர்களை சார்ந்தோருக்கான சிறப்புக் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

தேனி, அக். 02-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் முன்னாள் படைவீரர்கள் நலத்துறையின் சார்பில் முன்னாள் படைவீரர்கள் / சார்ந்தோர்கள் மற்றும் படைப்பணியில் பணிபுரிவோர்களை சார்ந்தோருக்கான சிறப்புக் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பட்டா மாறுதல், இலவச வீட்டு மனைப்பட்டா மற்றும் இராணுவப் பணியின்போது உயிர்நீத்த படைவீரர்களின் மனைவிக்கு கருணை அடிப்படையிலான வேலைவாய்ப்பு என மொத்தம் 17 கோரிக்கை மனுக்க ளைப் பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் சார்ந்தோரின் கோரிக்கை மனுக்களை சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழ ங்கி மனுக்கள் மீது குறித்த காலத்திற்குள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

மேலும், மாவட்ட நிர்வாகத்தின் மூலம் முன்னாள் படை வீரர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்தினர்கள் சுய தொழில் உருவாக்கிக் கொள்ளும் வகையில் மாவட்ட தொழில் மையம், தாட்கோ மற்றும் மாவட்ட முன்னோடி வங்கி ஆகியவை ஒருங்கிணைந்து தொழிற்பயிற்சியுடன் கூடிய வங்கிக் கடனுதவி வழங்க திட்டமிட்டு செயல்பட்டு வருகிறது. தொழில் தொடங்க விரும்புவோர் இவ்வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும், மாவட்ட நிர்வாகம் சார்பில் மாதந்தோறும் நடத்தப்படும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் குறித்து தங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கு தகவல் தெரிவித்து, அவர்களைப் பங்கேற்க செய்து, வேலைவாய்ப்பு பெற செய்யலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார். இக்கூட்டத்தில் மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் லெப்டினன் கர்னல் தினேஷ், முன்னாள் படைவீரர் நலன் மருத்துவமனை உதவி இயக்குநர் விங் கமாண்டர் கிருஷ்ணசாமி, உபதலைவர் கர்னல் ராஜேந்திரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.




## காரைக்குடியில் இருநாள் வளாக வேலைவாய்ப்பு முகாம் : 31 நிறுவனங்கள் பங்கேற்பு 212 மாணவிகளுக்கு பணி நியமனக் கடிதம்

காரைக்குடி, அக். 02-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி டாக்டர் உமையாள் ராமநாதன் மகளிர் கல்லூரியின் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புப் பிரிவு, நாண்டி அறக்கட்டளையுடன் இணைந்து மாணவிகளுக்கான இருநாள் வளாக வேலைவாய்ப்பு முகாமை நடத்தியது.

முகாமில் கல்லூரி மாணவிகள் மற்றும் முன்னாள் மாணவிகள் என மொத்தம் 524 பேர் பதிவு செய்தனர். பல்வேறு துறைகளைச் சேர்ந்த 31 நிறுவனங்கள் பங்கேற்று ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டன. இதில் 212 மாணவிகள் பணி நியமனக் கடிதங்களைப் பெற்றனர்.

மேலும் சில நிறுவனங்களில் நிர்வாக ஒப்புதல் நிலுவையில் உள்ளதால், கூடுதலாக மாணவிகளுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

முகாமின் முதல் நாளில் நேர்முகத் தேர்வை எதிர்கொள்ளும் திறன், தகவல் தொடர்புத் திறன், சுயவிவரம் தயாரித்தல், தன்னம்பிக்கை வளர்ப்பு மற்றும் பணியிட ஒழுக்கம் உள்ளிட்ட தலைப்புகளில் மனிதவள வல்லுநர்கள் பயிற்சி அளித்தனர். இரண்டாம் நாளில் நிறுவனங்களின் நேர்முகத் தேர்வு மற்றும் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் நடைபெற்றன.

நிகழ்ச்சியை சிண்டிகேட் உறுப்பினர் டாக்டர் சி. வேதிராஜன் தொடங்கி வைத்தார். நாண்டி அறக்கட்டளை மேலாளர் காசி விஸ்வநாதன் சிறப்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் டாக்டர் அ. ஹேமமாலினி கணேசன் தலைமை வகித்தார்.

பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு ஒருங்கிணைப்பாளர் டாக்டர் டி.ஆர். சுந்தரி வரவேற்றார். நாண்டி அறக்க ட்டளையின் வேலைவாய்ப்பு ஒருங்கிணைப்பாளர் செல்வி யுவஸ்ரீ நன்றி கூறினார்.

மாணவிகளின் திறன்களை மேம்படுத்தி தொழில்துறை வேலை வாய்ப்புகளைப் பெற வழிவகுக்கும் நோக்கில் நடைபெற்ற இந்த முகாம், உயர்கல்வியிலிருந்து தொழில்முறை வாழ்க்கைக்குச் செல்லும் மாணவிகளுக்கு பயனுள்ளதாக அமைந்தது

## ‘வாழ்ந்து காட்டுவோம்’ திட்டப் பணியாளர்களுக்கு நிலுவைச் சம்பளம், பணிப் பாதுகாப்பு வழங்க வேண்டும்: பழனிசாமி

சென்னை, அக்.02-

“தமிழக ஊரகப் புத்தாக்கத் திட்டம் / வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தில் பணியாற்றி வரும் அலுவலர்களுக்கான நிலுவை சம்பளத்தை வழங்குவதுடன், அவர்களுடைய பணிப் பாதுகாப்பை உறுதி செய்திட வேண்டும்,” என அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது, 2005-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ‘ஊரகப் புத்தாக்கத் திட்டம்’ 2021-ல் திமுக ஆட்சியில் ‘வாழ்ந்து காட்டுவோம் திட்டமாக’ பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இத்திட்டத்தில் தமிழகம் முழுவதிலும் மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் சுமார் 500-க்கும் மேற்பட்ட மேற்பார்வை அலுவலர்களும், சுமார் 3900-க்கும் மேற்பட்ட தளப் பணியாளர்களும் பணியாற்றி வருகின்றனர்.

இந்த 400-க்கும் மேற்பட்ட அலுவலர்கள் அனைவரும் பட்டதாரிகள் ஆவார்கள். அதில் 90% பணியாளர்கள் முதுகலைப் பட்டம் பெற்றவர்கள். இவர்கள் 2005-ஆம் ஆண்டு முதல் இன்றுவரை, அதாவது சுமார் 10 ஆண்டுகள் முதல் 18 ஆண்டுகள் வரை, தொகுப்பு ஊதியத்தில் பணியாற்றி வருகின்றனர்.

இவர்களுடைய முக்கிய பணி கிராமப் புறங்களில் உள்ள விவசாயிகளை ஒருங்கிணைத்து, உழவர் உற்பத்தியாளர் குழுக்களை உருவாக்கி, அவர்களுக்கு இலவசப் பயிற்சிகளும், துவக்க செயல்பாடுகளுக்காக, துவக்க மானிய நிதி வழங்குதல், கிராமப் புறங்களில் வசிக்கும் மாற்றுத் திறனாளிகளுக்கும், நலிவுற்றோருக்கும் அடையாள அட்டை மற்றும் சிறப்பு உதவிகள் வழங்குதல், மக்கள் தொகை கணக்கெடுப்பில் உதவுதல், அடித்தள மக்கள் அமைப்புகளை உருவாக்குதல், இளைஞர்களுக்கு திறன் பயிற்சி மற்றும் நேரடி வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தருதல், ஊராட்சிகளில் இ-சேவை மையங்களை அமைத்தல், மைக்ரோ கடன் திட்டங்கள் மூலம் கடன் வழங்கி தொழில் முனைவரை உருவாக்குதல் உள்ளிட்ட அரசின் பல கிராமப்புற திட்டங்களை செவ்வனே செயல்படுத்தி பல்வேறு சேவைகளை வழங்கி வருகின்றனர்.

குறிப்பாக, கிராமப்புற மக்களுக்கு வழங்கிய



மைக்ரோ கடனில் சுமார் 95 சதவீதத்திற்கு மேல் வெற்றிகரமாக திருப்பிச் செலுத்த வைத்துள்ளனர். தமிழகம் முழுவதும் ஊரகப் பகுதிகளில் இவர்கள் சுமார் 6.50 லட்சம் பயனாளிகளை நேரடியாகத் தொடர்புகொண்டு பணியாற்றி வருகின்றனர் என்று தங்களது கோரிக்கையில் தெரிவித்துள்ளனர்.

2019-ஆம் ஆண்டு கொரோனா பெருந்தொற்று காலத்தில் இவர்களுடைய பணி சிறப்பாக அமைந்தது. மேலும், இவர்கள் மகளிர் திட்டப் பணிகளையும் கூடுதலாக கவனித்து வருதாக தங்களது மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

‘வாழ்ந்து காட்டுவோம் திட்டம்’ கட்டம் 1-ல், பகுதி 1.0 மற்றும் பகுதி 2.0 ஆகியவை வெற்றிகரமாக செயல்பட்டதைத் தொடர்ந்து, அரசாணை எண் 40, நாள் 13.2.2026-ன்படி வாழ்ந்து காட்டுவோம் திட்டம் விரிவுபடுத்த ஆணையிடப்பட்டது. அதன்படி வாழ்ந்து காட்டுவோம் கட்டம் (பேஸ்) 2, பகுதி 3.0 முன்மொழியப்பட்டது.

அரசாணை எண் 40-ன்படி, தற்போதுள்ள பணியாளர்களைக் கொண்டே இத்திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும் என்றும், அவர்களின் ஊதியத்திற்காக போதுமான நிதி ஒதுக்கப்பட்டதுடன், திட்ட அறிக்கை இறுதி செய்யும் வரை பழைய பணியாளர்களே தொடர வேண்டும் என்றும், புதிய பணியாளர்களை நியமிக்கக்கூடாது என்றும், இப்பணியாளர்களை மகளிர் திட்டத்திற்கும் பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும் அந்த அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று இப்பணியாளர்கள் தங்களது கோரிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இவர்களுக்கு, கடந்த இரண்டு மாதங்களாக ஊதியம் இன்னும் வழங்கப்படவில்லை என்றும், மாநில அளவில் பணிபுரிந்து வந்த அனைவரையும் 23.9.2026 முதல் பணியில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே, தங்களுக்கு பணிப் பாதுகாப்பு வழங்கக் கோரியும், தாங்கள் பணிபுரிந்து வரும் மாதங்களுக்கு வழக்கம்போல் தொடர்ந்து சம்பளம் வழங்க வேண்டும் என்றும், மேலும் அரசாணையில் குறிப்பிட்டுள்ளபடி வாழ்ந்து காட்டுவோம் திட்டம் பகுதி 3.0-க்கு விரைந்து ஒப்புதல் வழங்கி நடைமுறைப்படுத்த வேண்டி, இவர்கள் அரசிடம் கோரிக்கை வைத்துள்ளனர்.

தமிழக ஊரகப் புத்தாக்கத் திட்டம்/வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தில் 10 முதல் 18 ஆண்டுகளாக தொடர்ந்து பணியாற்றிய காரணத்தால் அரசுப் பணிகளில் சேர்வதற்கான வயது வரம்பை இவர்கள் கடந்துவிட்டனர். மேலும், இத்துறையிலேயே தங்களது பெரும்பகுதியை கழித்துவிட்டதால், மாற்றுப் பணிகளுக்குச் செல்ல முடியாத இக்கட்டான சூழல் இவர்களிடையே நிலவுகிறது.

அரசு, இவர்களின் இச்சூழ்நிலையை கருத்திற்கொண்டு, வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தில் போதுமான பயிற்சி பெற்றுள்ள இவர்களைத் தொடர்ந்து பணி இடைவெளியின்றி ‘வாழ்ந்து காட்டுவோம் திட்டம் 3.0-ல்’ பணிபுரிய அனுமதிக்க வேண்டுமென்றும் அல்லது மகளிர் திட்டத்தில் இவர்களை இணைத்து பணிப் பாதுகாப்பு வழங்குவதுடன், இவர்களுக்கு வழங்க வேண்டிய இரண்டு மாத சம்பளத்தை உடனடியாக வழங்கிட த.வெ.க. அரசை வலியுறுத்துகிறேன்” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## சிவகங்கையில் குற்றத்தடுப்பு அதிரடி: ஒரே மாதத்தில் 35 பேர் கைது

### 21 பேர் குண்டர் சட்டத்தில் அடைப்பு; 6 பேரின் ஜாமீன் ரத்து

சிவகங்கை, அக்.02

சிவகங்கை மாவட்டத்தில் குற்றச் சம்பவங்களைத் தடுக்கவும், சட்டம்ஒழுங்கை பராமரிக்கவும் கடந்த செப்டம்பர் மாதம் முழுவதும் காவல்துறை சார்பில் சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

செப்டம்பர் 1 முதல் 30-ம் தேதி வரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில், குற்றச் செயல்களில் தொடர்புடைய மற்றும் குற்றப் பின்னணி கொண்ட 35 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீதிமன்றத்தில் நீண்ட நாட்களாக ஆஜராகாமல் இருந்த பிடியாணை நிலுவை குற்றவாளிகளை கைது செய்ய தனிப்படை அமைக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மாவட்டம் முழுவதும் வீடு உடைத்துத் திருடுதல் உள்ளிட்ட குற்றங்களில் ஈடுபட்டு தலைமறைவாக இருந்தவர்களை கண்டறிய, CCTV பதிவுகள், CDR



மற்றும் Tower Dump தரவுகள் ஆய்வு செய்யப்பட்டன. இதன் மூலம் 12 வழக்குகளில் தொடர்புடைய 21 பேர் கைது செய்யப்பட்டு, அவர்களிடமிருந்து திருட்டுச் சொத்துகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

தொடர்ந்து குற்றச் செயல்களில் ஈடுபட்டு பொதுமக்களுக்கு அச்சுறுத்தலாக இருந்தவர்களில் 21 பேர் மாவட்ட ஆட்சியரின் உத்தரவின் பேரில் குண்டர் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், நீதிமன்றப் பிணையில் வெளிவந்து மீண்டும் குற்றங்களில் ஈடுபட்டதாக கண்டறியப்பட்டவர்களில் 6 பேரின் ஜாமீன் ரத்து செய்யப்பட்டுள்ளது.

சுமார் 70-க்கும் மேற்பட்ட குற்றவாளிகளின் கைரேகை, கருவிழி மற்றும் முகப்பட விவரங்கள் MCU முறையில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் சுமார் 100 குற்றச் சரித்திரப் பதிவேடு குற்றவாளிகள் மற்றும் பிரச்சனைக்குரிய நபர்களிடம், மீண்டும் குற்றங்களில் ஈடுபடாமல் இருக்க வட்டாட்சியர் முன்னிலையில் பிணைப்பத்திரம் பெறப்பட்டுள்ளது.

தொடர்ந்து குற்றச் சம்பவங்களில் ஈடுபடுபவர்கள் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா, ஐ.பி.எஸ். எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## எல் நினோ தாக்கத்தால் தமிழ்நாட்டிற்கு பாதிப்பு குறைவு: வானிலை ஆய்வு மையத்தின் தலைவர் மொகபத்ரா தகவல்



எல் நினோ தாக்கத்தால் தமிழ்நாட்டிற்கு பாதிப்பு குறைவாகவே இருக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையத் தலைவர் மொகபத்ரா தகவல் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் அக்டோபர் 15 முதல் 21ஆம் தேதிக்குள் வடகிழக்கு பருவமழை தொடங்க வாய்ப்பு உள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையத் தலைவர் மொகபத்ரா கூறியுள்ளார். மேலும், புயல் அமைப்புகள் இல்லாதபோது தமிழ்நாட்டில் மழை குறையலாம் என்றும், அக்டோபர் மாதத்தைப் பொறுத்தவரை தென் தமிழ்நாடு, வட தமிழ்நாட்டின் சில பகுதிகள் மற்றும் கேரளாவின் மலைப் பகுதிகளில் இயல்பான அல்லது இயல்பை விட கூடுதல் மழை பெய்ய வாய்ப்புள்ளது என்றும் கணித்துள்ளார்.

பருவமழை காலத்தில் தென் தீபகற்ப பகுதியின் பெரும்பாலான இடங்களில் அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலைகள் இயல்பை விட அதிகமாக இருக்க வாய்ப்புள்ளது. குறிப்பாக, நடப்பாண்டு எல் நினோ காரணி வலுவாக உள்ளதாகவும், இது நவம்பர் இறுதி வரை வலுவாக நீடித்து, பின்னர் படிப்படியாகக் குறையத் தொடங்கும். இருப்பினும், மார்ச் 2027ஆம் ஆண்டு வரை இதன் தாக்கம் தொடரலாம் என்றும் கணித்துள்ளார்.

எல் நினோ டிசம்பர் மாதம் வரை நடுநிலையாகவே தொடரும் என எதிர்பார்க்கப்பட்டாலும், அடுத்த சில மாதங்களில் இது நேர்மறை நிலையை எட்டக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையத் தலைவர் மொகபத்ரா கணித்துள்ளார்.

## நகர்ப்புறக் கழிவுகளை கிராமங்களுக்கு எடுத்துச் செல்லும் திட்டம் இல்லை: ஊரக வளர்ச்சித் துறை விளக்கம்

சென்னை, அக்.02-

சிடிசிஎல் நிறுவனத்தின் மாற்றம் மூலமாக நகர்ப்புறக் கழிவுகளை கிராமங்களுக்கு எடுத்துச் செல்லும் திட்டம் இல்லை என்று ஊரக வளர்ச்சித் துறை விளக்கம் அளித்துள்ளது.

தமிழகத்தில் திடக்கழிவு மேலாண்மையை மேம்படுத்துவதற்காக சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின்கீழ் ‘க்ளீன் தமிழ்நாடு கம்பெனி லிமிடெட்’ (CTCL) மற்றும் தூய்மை இயக்கம் செயல்பட்டு வந்தன.

நிர்வாக வசதிக்காக இவற்றை ஊரக வளர்ச்சித் துறைக்கு மாற்றி தமிழக அரசு சமீபத்தில் உத்தரவிட்டது. இதனால் நகர்ப்புற கழிவுகள் கிராமப் புறங்களில் கொட்டப்படும் அபாயம் உள்ளதாக புகார்கள் எழுந்தன.

இதுகுறித்து ‘இந்து தமிழ் திசை’ நாளிதழில், ‘நகர்ப்புற கழிவுகளை கிராமங்களில் கொட்ட திட்டமா?’ என்ற தலைப்பில் கடந்த செப்.25-ம் தேதி செய்தி வெளியானது.

இந்நிலையில், நகர்ப்புறக் கழிவுகளை கிராமங்களுக்கு எடுத்துச் செல்லும் திட்டமில்லை என்று ஊரக வளர்ச்சித் துறை விளக்கம் அளித்துள்ளது.

இதுதொடர்பாக ஊரக வளர்ச்சித் துறை வெளியிட்டுள்ள விளக்கத்தில் கூறியிருப்பதாவது: நகர்ப்புற கழிவுகளை கிராமப்புறங்களுக்கு எடுத்துச் செல்வது சிடிசிஎல் நிறுவனத்தின் நோக்கமல்ல.

கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளில் திடக்கழிவு மேலாண்மையை வலுப்படுத்துவதுடன், தேவைக்கேற்ப நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தொழில்நுட்ப ஆதரவை சிடிசிஎல் வழங்கும்.

சுற்றுச்சூழலுக்கு உகந்த அறிவியல் முறையில் கழிவு மேலாண்மையை மேம்படுத்தி, குப்பைக் கிடங்கில்லா நிலை (Zero Waste to Landfill) என்ற நீண்டகால இலக்கை நோக்கி செயல்படுவதே இதன் நோக்கமாகும்.

ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பும் தனது எல்லைக்குள் உருவாகும் கழிவுகளை தரம் பிரித்தல், செயலாக்கம், மறுசுழற்சி மற்றும் வள மீட்பு மூலம் அறிவியல் முறையில் கையாளும். ஒரு உள்ளாட்சி அமைப்பில் இருந்து மற்றொரு பகுதிக்கு கழிவுகளை மாற்றுவது இதன் நோக்கமல்ல.

கழிவு செயலாக்க வசதிகள், உரம் தயாரித்தல் போன்ற திட்டங்களுக்கு சிடிசிஎல் தொழில்நுட்ப ஆதரவு வழங்கும். மேலும், திட்ட அறிக்கை மற்றும் சாத்தியக்கூறு ஆய்வு தயாரிப்பு, கண்காணிப்பு உள்ளிட்ட பணிகளையும் மேற்கொள்ளும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## “தேர்தல் ஆணைய ஆன்லைன் படிவம் 6-ல் மாற்றம் செய்ய உத்தரவிட்டது யார்?” - ராகுல் காந்தி

புதுடெல்லி, அக்.02-

புதிய வாக்காளர்களை இணைப்பதற்கான படிவம் 6-ல் மேற்கொள்ளப்பட்ட மாற்றம் சட்டவிரோதமானது என்று குற்றம் சாட்டியுள்ள ராகுல் காந்தி, ‘இந்த மாற்றத்தைச் செய்ய டிசிஎஸ் நிறுவனத்துக்கு தேர்தல ஆணையத்தில் யார் உத்தரவிட்டார்கள்?’ என கேள்வி எழுப்பி உள்ளார்.

காங்கிரஸ் மூத்த தலைவரும், மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி இது தொடர்பாக வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், ‘இணையவழி படிவம் 6 சட்டவிரோதமாக மாற்றப்பட்டுள்ளது. இதை தேர்தல் ஆணையர்களே பதிவு செய்துள்ளனர். இந்த மாற்றத்தைச் செய்ய டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் (டிசிஎஸ்) நிறுவனத்துக்கு தேர்தல் ஆணையத்தில் யார் உத்தரவிட்டது?

டிசிஎஸ் நிறுவனத்தில் யார் அதற்கு ஒப்புதல்



அளித்தது? அதோடு, அதைச் செய்ய அவர்களுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டதா?’ என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

ராகுல் காந்தியின் இந்தப் பதிவை டேக் செய்து காங்கிரஸ் செய்தித் தொடர்பு பொதுச் செயலாளர் ஜெயராம் ரமேஷ் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், ‘வாக்காளர் பட்டியலில் இருந்து ஜென்ஸீ தலைமுறை வாக்காளர்களை நீக்குவதற்காக இந்த ஆண்டு ஜூலை மாத மத்தியில் படிவம் 6-ல் மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

அரசியலமைப்புக்கு முரணாக, தலைமைத் தேர்தல் ஆணையரால் இது நிகழ்த்தப்பட்டது. இந்த நடவடிக்கை, பிரதமர் மற்றும் உள்துறை அமைச்சர் ஆகிய இருவரால் திட்டமிடப்பட்டது’ என்று குற்றம் சாட்டியுள்ளார்.

முன்னதாக, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கும் ஆன்லைன் படிவம் 6-ல் சேர்க்கப்பட்டிருந்த கூடுதல் சிறப்புத் தீவிர திருத்த (எஸ்ஐஆர்) உறுதிமொழிப் பிரிவை தேர்தல்ஆணையம் நீக்கியுள்ளது.

எஸ்ஐஆர் பணிகள் நிறைவடைந்த மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் இந்த மாற்றம் உடனே அமலுக்கு வந்துள்ளது. இதன் மூலம், அங்கு புதிதாக வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விண்ணப்பிப்பவர்கள், 1960-ம் ஆண்டின் வாக்காளர்கள் பதிவு விதிகளின்படி நிர்ணயிக்கப்பட்ட ‘படிவம் 6’-ஐ மட்டும் இனி சமர்ப்பித்தால் போதுமானது என்பது கவனிக்கத்தக்கது.

தேர்தல் ஆணையத்தின் டிஜிட்டல் இணையதளம் மற்றும் அதன் உள்கட்டமைப்பை நிர்வகிக்கும் தொழில்நுட்ப சேவை நிறுவனமாக டிசிஎஸ் செயல்படுகிறது. தேர்தல் ஆணையத்துக்கான மின்னணு வாக்காளர் பதிவு மற்றும் விண்ணப்பச் செயல்முறைகளைக் கையாளும் ‘ECINET’ என்ற டிஜிட்டல் இணையதளத்தை டிசிஎஸ் நிர்வகிக்கிறது.

தேர்தல் ஆணையத்தின் நிர்வாக ரீதியிலான அறிவுறுத்தலின் அடிப்படையில் இந்த இணையதளத்தில் டிசிஎஸ் தொழில்நுட்ப மாற்றங்களை மேற்கொள்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## “9/11 பாணி தாக்குதலை தடுத்துள்ளார் விமானி ஸ்மித் மச்சார்” - பிரதமர் மோடி பெருமிதம்

புதுடெல்லி, அக்.02-

ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் (யுபிஎஸ்சி) நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார்.

அப்போது அவர், “துபாயில் இருந்து டெல் அவிவ் நோக்கிச் சென்று கொண்டிருந்த போயிங் பயணிகள் விமானத்தில் நேற்று நடந்த சம்பவம், அதில் இந்தியாவைச் சேர்ந்த கேப்டன் ஸ்மித் மச்சார் வெளிப்படுத்திய பொறுமை, விவேகம், துணிச்சல் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

9/11 போன்ற ஒரு தாக்குதலில் இருந்து விமானி ஸ்மித் மச்சார், தங்களை காப்பாற்றியதாக இஸ்ரேல் பிரதமர் கூறி இருப்பது ஒவ்வொரு இந்தியரையும் பெருமை கொள்ள வைத்திருக்கிறது.

இன்று நான் அவரது தந்தை பூபேந்திர பாய், தாய் கீதா பெஹன், மனைவி சோனல் ஆகியோருடன் உரையாடினேன். இன்று உலகம் முழுவதும் அவரைப் பற்றி பெருமை கொள்கிறது.

இந்தியாவின் பெருமையை உயர்த்திய சகோதரர் ஸ்மித்தை பாராட்டுமாறும், அவரது நல்வாழ்வுக்காக பிரார்த்தனை செய்யுமாறும் நான் எனது சக குடிமக்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்று யுபிஎஸ்சி-யின் 100 ஆண்டுகளைக் கொண்டாடும் நாள் மட்டுமல்ல, அதன் பாரம்பரியத்தைக் கொண்டாடும் நாளும்கூட. இது ஒவ்வொரு ஆண்டும் லட்சக்கணக்கான இளைஞர்கள் கொண்டிருக்கும் லட்சியத்தைக் கொண்டாடும் நிகழ்வாகும்.

இந்த 100 ஆண்டுகாலப் பயணத்தில் தலைமுறைகள் மாறின, அரசுகள் மாறின, தொழில்நுட்பம் மாறியது, பாடத்திட்டங்கள் மாறின. ஆனால், யுபிஎஸ்சி மீதான நம்பிக்கை இன்றும் என்றும் மாறாமல் உறுதியாக உள்ளது.

இன்று, யுபிஎஸ்சி மூலம் தேர்வாகக் கூடியவர்கள் வளர்ந்த இந்தியா எனும் இலக்கை அடைவதில் பெரும் பங்காற்றுவார்கள். இதை கருத்தில் கொண்டு, தேசமே முதலில், குடிமக்களே முதலில் என்ற இரண்டு கொள்கைகளை நினைவில் கொள்ள வேண்டும்.

அரசுப் பதவியின் மீதான ஈர்ப்பால் அல்லாமல், மக்கள் சேவை மீதான ஆர்வத்தால் ஈர்க்கப்படும் இளைஞர்களை நாம் பொதுச் சேவைக்கு (Public Services) கொண்டு வர வேண்டும். எனவே, பணி நியமனத் தேர்வானது ஒரு தேர்வர் எவ்வளவு விஷயங்களை தெரிந்து வைத்துள்ளார் என்பதை மட்டும் சோதிப்பதாக இருக்கக்கூடாது. மாறாக, அந்த இளைஞர் ஏன் குடிமைப் பணிகளில் இணைய விரும்புகிறார் என்பதையும் அது ஆராய வேண்டும்.

அரசு மட்டுமே நம்மைப் பராமரிக்கும் பெற்றோர் என்று கருதப்பட்ட ஒரு காலத்தை நாம் கடந்த காலத்தில் பார்த்திருக்கிறோம். அரசே முழு அதிகாரம் கொண்ட அமைப்பு என்று கருதப்பட்ட காலம் அது.

ஆனால், குடிமக்களே தெய்வம் என்ற தாரக மந்திரத்தைக் கொண்ட ஒரு காலகட்டத்தில் நாம் இருக்கிறோம். அதாவது குடிமகன் நமக்கு தெய்வத்துக்கு இணையானவர். குடிமக்களுக்குச் சேவை யாற்றுவதே நமது முதன்மையான முன்னுரிமை.

ஏழைகளின் துயரத்தைப் புரிந்துகொள்ளும் இரக்க உணர்வு கொண்ட, சிக்கல்களைத் தீர்ப்பதில் புதுமையான அணுகுமுறையைக் கையாளக்கூடிய, நாட்டின் தேவைகளை உணர்ந்த வல்லுநர்கள் நமக்குத் தேவை. சட்டங்கள் பின்பற்ற ப்படுவதை உறுதி செய்வதோடு மட்டுமல்லாமல், ஒரு குறிப்பிட்ட சட்டம் உண்மையில் நல்லதா என்பதையும் புரிந்து கொள்ளக்கூடிய வல்லுநர் தேவை” என தெரிவித்தார்.



■ நீலகிரி மாவட்ட ஆட்சியர் கூடுதல் அலுவலகத்தில், பொது சுகாதாரத்துறையின் சார்பில், மாவட்ட அளவிலான ஒருங்கினைப்பு குழு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில் நடைபெற்றது. உடன் அரசு உதகை அரசு மருத்துவத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ஸ்ரீனிவாசன், இணை இயக்குநர் (மருத்துவ நல பணிகள்) மரு. ராஜசேகரன், துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு.சோமசுந்தரம் உட்பட பலர் உள்ளனர்.

# குன்னூர் அருகே விபத்து 10-ம் வகுப்பு மாணவன் பலி மற்றொரு மாணவன் படுகாயம்

குன்னூர், அக்.02-

நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே உள்ள எல்லநள்ளி ஆலன் நகரை சேர்ந்தவர் சரவணன் இவரது மகன் ஆகாஷ் (15 ),பழைய அருவங்காடு பகுதியைச் சேர்ந்த இவரின் நண்பர் கைலாஷ்(15)ஆகிய இருவரும் பத்தாம் வகுப்பு படித்து வரும் நிலையில் தற்போது காலாண்டு விடுமுறை என்பதால் நேற்று மாலை சேலாசிலிருந்து எல்லநள்ளி ஆலன் நகருக்கு இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது சுங்கம் பகுதியில் அட்டைப்பெட்டிகளை ஏற்றி வந்த லாரி மீது எதிர்பாராத வகையில் மோதியதில் இருசக்கர



வாகனத்தில் பின்புறம் அமர்ந்து வந்த கைலாஷ் தூக்கி எறியப்பட்டு சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிர் இழந்தார்.இருசக்கர வாகனத்தை ஓட்டிச் சென்ற ஆகாஷ் படுகாயத் துடன் லாரிக் கடியில் சிக்கி இருந்த நிலையில் அக்கம் பக்கம் உள்ளவர்கள் உடனடியாக ஓடி வந்து அவரை மீட்டனர். இதனை தொடர்ந்து 108 ஆம்புலன்ஸ் மூலம் உடனடியாக அரசு மருத்துவ மனைக்கு கைலாஷ் உடலையும், சிகிச்சைக்காக ஆகாஷையும் அனுப்பி வைத்தனர். மேலும் மேல் சிகிச்சைக்காக ஆகாஷ் கோவை அரசு மருத்து வமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இது தொடர்பாக மேட்டுப்பாளையத்தை சேர்ந்த லாரி ஓட்டுநர் சிவராஜ் (55) கைது செய்து காவல்துறை கொலகம்பை காவல் துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.





# கிருஷ்ணகிரியில் ஓய்வுபெற்ற நீதித்துறை அலுவலர்கள் நலச்சங்கத்தின் 15ம் ஆண்டு விழா, மாவட்ட பொதுக்குழுக் கூட்டம்

கிருஷ்ணகிரி, அக்.02-

ஓய்வுபெற்ற தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட நீதித்துறை அலுவலர்கள் நலச்சங்கத்தின் 15ம் ஆண்டு விழா மற்றும் மாவட்ட பொதுக்குழுக் கூட்டம் கிருஷ்ணகிரியில் நடந்தது. மாவட்ட தலைவர் கோபிநாத் ராவ் தலைமை வகித்தார். தணிக்கையாளர் சத்தியநாராயணன், சங்க ஆலோசகர் ராஜாமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட துணை தலைவர் காவேரி வரவேற்றார். மாவட்ட செயலாளர் கோபால் ஆண்டறிக்கை வாசித்தார். பொருளாளர் வெங்கடேசன் வரவு, செலவு கணக்கை சமர்பித்தார். வருவாய்த்துறை மாவட்ட தலைவர் செல்வகுமார், ஜனார்த்தனராவ், நீதித்துறை மாவட்ட தலைவர் அன்பரசு, உதவியாளர் பழனி, பெரியசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

பொதுக்குழு கூட்டத்தில், மத்திய அரசு ஓய்வூதியர்களுக்கு அமல்படுத்தப்பட்டுள்ளவாறு 2016ம் ஆண்டுக்கு முன் ஓய்வு பெற்ற ஓய்வூதியர்களுக்கும், குடும்ப ஓய்வூதியர்களுக்கும் ஓய்வூதியம் மற்றும் மறு நிர்ணயம் செய்து திருத்தி அமைக்க வேண்டும். ஓய்வூதியர்கள், குடும்ப ஓய்வூதியர்கள் 70 வயது நிறையும் போது 10 சதவீதமும், 80 வயது நிறையும் போது மேலும் 10 சதவீதமும் கூடுதல் ஓய்வூதியம் வழங்க வேண்டும். தெலுங்கானா மாநில அரசு அமல்படுத்தி உள்ளவாறு அதே விகிதத்தில் உயர்த்தி வழங்க வேண்டும். குடும்ப பாதுகாப்பு திட்டத்தின் கீழ் மாதாந்திர சந்தா தொகை 150 ரூபாய் உயர்த்தப்பட்டு பிடித்தம் செய்யப்படும் நிலையில் ஓய்வூதியர் இறக்கும் தேர்வில் தற்போது வழங்கப்படும் 50 ஆயிரம் ரூபாயை 2 லட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்க வேண்டும். இத்திட்ட த்தை குடும்ப ஓய்வூதிய ர்களுக்கும் நீடிப்பு செய்ய வேண்டும் என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# 'டெட்' சிறப்பு தகுதித் தேர்வு முடிவுகளை வெளியிட உயர் நீதிமன்றம் அனுமதி

சென்னை, அக்.02-

அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கான சிறப்பு தகுதித் தேர்வின் முடிவுகளை வெளியிட விதிக்கப்பட்ட இடைக்காலத் தடையை நீக்கிய சென்னை உயர் நீதிமன்றம், முடிவுகளை வெளியிட ஆசிரியர் தேர்வு வாரியத்துக்கு அனுமதி அளித்து உத்தரவிட்டுள்ளது.

அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்கும், நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும், கடந்த ஜூலை மாதம் சிறப்பு தகுதித் தேர்வை ஆசிரியர் தேர்வு வாரியம் நடத்தியது.

தங்களின் ஒவ்வொரு ஆண்டு அனுபவத்துக்கும் ஒரு கருணை மதிப்பெண் வழங்கும்படி ஆசிரியர் தேர்வு வாரியத்துக்கு உத்தரவிடக் கோரி தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த பி.நடராஜன், என்.செல்வன் உள்ளிட்ட பலர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, ஆசிரியர்களுக்கு கருணை மதிப்பெண்கள் வழங்குவது தொடர்பாக கொள்கை முடிவு எடுக்க வேண்டியுள்ளதாக அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதை ஏற்ற உயர் நீதிமன்றம், சிறப்பு தகுதித் தேர்வு முடிவுகளை வெளியிட இடைக்காலத் தடை விதித்து, கடந்த ஜூலை 8-ம் தேதி உத்தரவிட்டது.

மனுதாரர்கள் இடைக்கால கோரிக்கை ஏதும் வைக்காத நிலையில், ஆசிரியர்களுக்கான சிறப்பு தகுதித் தேர்வு முடிவுகளை வெளியிட இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது; பிரதான வழக்கில் இறுதி விசாரணைக்கு தயாராக இருப்பதால், தேர்வு முடிவுகளை வெளியிட விதிக்கப்பட்ட தடையை நீக்க வேண்டும் என, தமிழக அரசின் பள்ளிக் கல்வித் துறை தரப்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி மும்மினேனி சுதீர் குமார், அரசுத்தரப்பு கோரிக்கையை ஏற்று, ஆசிரியர்களுக்கான சிறப்புத் தகுதித் தேர்வு முடிவுகளை வெளியிட விதிக்கப்பட்ட தடையை நீக்கியும், முடிவுகளை வெளியிட ஆசிரியர் தேர்வு வாரியத்துக்கு அனுமதியளித்தும் உத்தரவிட்டார்.

மேலும், பணி அனுபவத்துக்கான ஒவ்வொரு ஆண்டுக்கும் தலா ஒரு கருணை மதிப்பெண் வழங்கக் கோரி ஆசிரியர்கள் தாக்கல் செய்த பிரதான வழக்கை அக்டோபர் 7-ம் தேதிக்கு தள்ளிவைத்து உத்தரவிட்டுள்ளார்.









# பாத்திமா கல்லூரி மாணவிகள் சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு : வாகன ஓட்டிகளுக்கு துண்டுப் பிரசுரங்கள் வழங்கி போக்குவரத்து விதிகளை கடைப்பிடிக்க அறிவுறுத்தல்

மதுரை, அக்.02-

மதுரை பாத்திமா கல்லூரி (தன்னாட்சி) சாலைப் பாதுகாப்பு மன்றம் சார்பில், பொதுமக்களிடையே போக்குவரத்து விதிகள் மற்றும் சாலைப் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி இன்று காலை கல்லூரி வளாக நுழைவாயில் முன்பு நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் முனைவர் சகோதரி எம். பாத்திமா மேரி தலைமை வகித்தார். தல்லாகுளம் போக்குவரத்து காவல் ஆய்வாளர் ஜி. பூர்ண கிருஷ்ணன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு விழிப்புணர்வுப் பணிகளை தொடங்கி வைத்தார்.





சாலைப் பாதுகாப்பு மன்ற ஒருங்கிணைப்பாளர்கள் முனைவர் கே. சங்கீதா, முனைவர் ஆர். செல்வமீனா மற்றும் தரவட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் அருள் தீபா ஆகியோர் முன்னிலை வகித்து நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தனர்.

இதில் சுமார் 100 மாணவிகள் பங்கேற்று, சாலைப் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து விதிகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

தொடர்ந்து அவ்வழியாகச் சென்ற இருசக்கர வாகன ஓட்டிகள், ஆட்டோ மற்றும் கார் ஓட்டுநர்களுக்கு விழிப்புணர்வுத் துண்டுப் பிரசுரங்களை வழங்கினர். தலைக்கவசம் அணிதல், காரில் இருக்கைப் பட்டை அணிதல், வாகனம் ஓட்டும்போது செல்போன் பயன்படுத்துவதைத் தவிர்த்தல் உள்ளிட்ட சாலைப் பாதுகாப்பு விதிகளை கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும் என அறிவுறுத்தினர்.





## ஊத்துக்கோட்டை பேரூராட்சியில் தூய்மை பணியாளர்கள் மேம்பாட்டு திட்டம் அரசுசேவைகள் மற்றும் நலம் காக்கும் நலதிட்ட மருத்துவ முகாம்

திருவள்ளூர், அக்.02-

ஊத்துக்கோட்டை பேரூராட்சி மற்றும் அரசு மருத்துவமனை இணைந்து தூய்மை பணியாளர்களுக்காகன பாதுகாப்பு மற்றும் நலம் காக்கும் முகாம் பேரூராட்சி செயல் அலுவலர் கோ.சதீஷ் இளநிலை உதவியாளர் ஜெய்சங்கர் தலைமையில் பேரூராட்சி தலைவர் அப்துல்ரஷீத் துணை தலைவர் கே.ஆர்.குமரவேல் தூப்புரவு மேற்பார்வையாளர் கோபி முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தூய்மைபணியாளர்கள் மற்றும் குடும்பத்தினர்களுக்கு பாதுகாப்பு சேவை மருத்துவ முகாம் நடைபெற்றது அதனை தொடர்ந்து அணைத்து தூய்மை பணியாளர்களுக்கு சால்வை அணிவித்து கௌவுரவிக்கப்பட்டது இந்த நிகழ்வில் கவுன்சிலர்கள் கோகுல்கிருஷ்ணன், அருணாச்சலம், ஆனந்தி, கல்பனாபார்த்தீபன், வெங்கடேசன் மற்றும் பேரூராட்சி ஊழியர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்





## இளையான்குடி அருகே மழைநீர் வடிய வழியின்றி குடியிருப்புப் பகுதியில் தேக்கம்: தனிநபர் பட்டாவால் உருவான சிக்கலைத் தீர்க்க மாவட்ட நிர்வாகத்திற்கு கோரிக்கை

இளையான்குடி, அக்.02-

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வட்டம் இடையவலசை பகுதியில் மழைநீர் வடிந்து செல்வதற்கான வழி அடைக்கப்பட்டுள்ளதால், குடியிருப்புப் பகுதிகளில் தண்ணீர் தேங்கி பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

இடையவலசை கிராமத்தில் பல ஆண்டுகளாக மழைநீர் வடிந்து செல்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்த வழித்தடம் இருந்து வந்துள்ளது. ஆனால், அண்மைக்காலமாக மழைநீர் செல்லும் பகுதிக்கு அருகிலுள்ள நிலத்திற்குத் தனிநபர் பட்டா வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதன் காரணமாக, சம்பந்தப்பட்ட நபர் மழைநீர் செல்லும் வழியை மறித்து அடைத்து வைத்துள்ளார்.

இதனால் அப்பகுதியில் பெய்யும் மழைநீர் வெளியேற முடியாமல் குடியிருப்புகளுக்கு முன்பாகவும், சாலையிலும் குளம் போலத் தேங்கி நிற்கிறது. தொடர்ந்து தண்ணீர் தேங்கி நிற்பதால் கொசுக்கள் உற்பத்தியாகி தொற்றுநோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதுடன், அப்பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கையும் வாழ்வாதாரமும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

மழைநீர் வடிந்து செல்லும் பொது வழியை மீட்டெடுக்கவும், பொதுமக்களின் சுகாதாரத்தைப் பாதுகாக்கவும் சிவகங்கை மாவட்ட நிர்வாகம் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

# பழனியருகே தவெக ஒன்றிய செயலாளரின் தாயாரை தாக்கிய திமுக பிரமுகர் கைது

## இந்த தாக்குதல் தனிப்பட்ட விரோதம் அல்ல என்றும், அரசியல் பின்புலத்துடன் நடந்த தாக்குதல் என்று தவெகவினர் புகார்

திண்டுக்கல், அக். 02-

திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே உள்ளது தூம்பலப்பட்டி. இங்குள்ள பழனியாண்டவர் நகரில் வசித்து வருபவர் சலாமத் நிஷா(57). இவரது மகன் முகமது ஜின்னா. இவர் தமிழக வெற்றிக்கழகத்தின் தொப்பம்பட்டி மத்திய ஒன்றிய செயலாளராக உள்ளார். இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு முகமது ஜின்னாவின் தாயார் சலாமத் நிஷாவை அதே பகுதியில் வசிக்கும் சபரி(32) என்பவர் மதுபோதையில் தாக்கியதாக தெரிகிறது. இதில் காயமடைந்த சலாமத் நிஷாவை பழனி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். இந்த சம்பவம் குறித்து



தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த கீரனூர் போலீசார் சலாமத்நிஷாவை தாக்கிய சபரியை கைது செய்தனர். இந்நிலையில் பழனி அரசு மருத்துவ மனையில் தவெகவினர் குவிந்தனர். அப்போது தவெக ஒன்றிய செயலாளர் முகமது ஜின்னா தெரிவித்ததாவது :- கீரனூர் பகுதியில் நடைபெறும் சட்ட விரோத செயல்களை அப்பகுதி தவெக வினர் தடுத்து வருவதாகவும், குறிப்பாக மண் கடத்தல், மதுபான சில்லரை விற்பனை தடுப்பது என சட்டவிரோத செயல்களை தடுத்து வருவதால் திமுகவினர் கடும் எரிச்சல் அடைந்துள்ளனர். எனவே தவெக நிர்வாகிகள் மீது கோபத்தை வெளிப்படுத்த முடியாமல் எங்களது குடும்பத்தினரை தாக்கும் செயலில் ஈடுபட்டுள்ளனர். எனது தாயார் மீது நடந்த தாக்குதல் தனிப்பட்ட நபர்களின் பிரச்சனை காரணம் அல்ல என்றும், இதில் அரசியல் பின்புலம் உள்ளவர்களின் திட்டமிட்ட தாக்குதல் என்றும் தெரிவித்தார். மேலும் தவெக அரசுக்கு கலங்கம் ஏற்படாத வண்ணம், சட்டவிரோத செயல்களை தடுக்கும் தவெகவினருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் தகுந்த பாதுகாப்பு அளிக்கவேண்டும். எனவே கீரனூர் போலீசார் இந்த விவகாரத்தில் முறையாக விசாரணை நடத்தி தாக்குதலின் பின்புலத்தில் உள்ளவர்களையும் கைது செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தார். பழனி அரசு மருத்துவமனையில் தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள் குவிந்தது குறித்து தகவல் அறிந்து வந்த போலீசார் அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தியதை அடுத்து அனைவரும் கலைந்து சென்றனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161